**56. அருந்ததி கதை**

பொருந்திய கற்பினையுடைய அருந்ததி திருந்திய தவத்தினையுடைய வசிட்டருடைய மனைவி நற்குணங்களெல் லாம் நன்கு அமையப் பெற்றவள். இவள் தன் கற்பின்சிறப்பால் இன்றும் விண்மீனாக இலங்குகின்றனள்.



புதிதாக மணம் செய்து கொள்ளும் பூவையர் தாம்கற்புடையராக விளங்கும் பொருட்டு அருந்ததி பார்த்தலும், தவறி நடந்து அகலிகையைப்போல் இழிந்துபோகாமல் அம்மி மிதித் தலும் திருமணங்களில் நிகழ்கின்றன. இவள் நன்மக்கள் பேற்றையும் இனி தடைந்துவிளங்கினாள். மனைவியின் கற்பு மாட்சியாலும் மக்கட் பேற்றின் பெருமையாலும் வசிட்டருடைய வாழ்க்கைசிறந்து விளங்கியது. உலகினர்க்கு மனைவியின் கற்புடைமையும் அதற்கடுத்தபடியாக நன்மக்கட் பேறும்மிகுந்த சிறப்பளிப்பன என்பதை எல்லோரும் அருந் ததி வாயிலாக நன்கு அறிந்து கொண்டனர்.

[மனைமாட்சியும் மக்கட்பேறும்]